பக்கங்கள்:-20

# காலை முரசு

## 2 மீனவர்களை காணவில்லை

யாழ். ஊர்காவற்றுறையில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள் காணாமல்போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 15ஆம் திகதி 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 04 | செவ்வாய்க்கிழமை | 18.03.2025 | அதிர்வு 225

# தென்னக்கோனின் ரிட் மனு நிராகரிப்பு

## உடனடியாகக் கைது செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

2023 ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம பகுதியில் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் தன்னைக் கைது செய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்துச் செய்யுமாறு கோரி முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை நிராகரித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மீதான தீர்ப்பு நேற்று வழங்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 06



# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கமைய புதிய அரசமைப்பை நிச்சயம் உருவாக்குவோம்

## நாடாளுமன்றில் நீதி அமைச்சர் சத்தியம்

“புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பணிகளை உரிய காலத்தில் நாங்கள் முன்னெடுப்போம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.”

- இவ்வாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார். 07



# பட்டலந்தை போல் வடக்கு, கிழக்கு சித்திரவதை முகாம்கள் குறித்தும் விரைவில் வெளிப்படுத்த வேண்டும் அநுர அரசு

## தமிழரசுக் கட்சியின் எம்.பி. ஸ்ரீநேசன் வலியுறுத்து



(கனகராசா சரவணன்)

“பட்டலந்த சித்திரவதை முகாம் 37 வருடங்களுக்குப் பின்னர் வெளிவந்துள்ளது. இவ்வாறு வடக்கு, கிழக்கில் இயங்கிய பல முகாம்களில் தமிழர்கள் படுகொலை மற்றும் சித்திரவதை செய்யப்பட்டனர். தமிழ் மக்கள் என்பதற்காக அதனை மூடிமறைத்துவிட்டு சிங்கள இளைஞர்கள் மற்றும் உங்கள் கட்சியினர் மாத்திரம் பாதிக்கப்பட்டார்கள் என்று கருத்துக் கொண்டுவந்திருப்பது கேள்விக்குறியாக உள்ளது. ஆகவே, தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியையும் தேசிய மக்கள் சக்தி வெளிக் கொண்டுவர வேண்டும்.”

– இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று 06




இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடர்பான முக்கிய வழக்கு ஒன்று இன்று யாழ்.மாவட்ட நீதிமன்றுக்கு வருகின்றது.

கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் தாக்கல் செய்த மனுவே இன்று நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்பட இருக்கின்றது.

கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து மாவை சேனாதிராஜா விடுவிக்கப்படுகின்றமைக்கு எதிராக சிவமோகன் முதலில் ஒரு வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தொடுத்திருந்தார். அது தொடர்பில் அவர் கோரிய இடைக்கால தடை உத்தரவை நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்து வழங்க முன்னரே, மாவை சேனாதிராஜா தலைமைப் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டு, அந்தப் பதவிக்கு பதில் தலைவராக சி.வி.கே.சிவஞானம் நியமிக்கப்பட்டு விட்டார்.

அதனால் தான் தொடுத்த அந்த வழக்கைகை வாங்கினார் சிவமோகன். 06






# சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் பொலிஸாருடன் நட்பாக இருக்கின்றமையால் முறையிட மக்கள் அச்சம்!

## கிளிநொச்சி நிகழ்வில் ஆளுநர் வேதநாயகன் சுட்டிக்காட்டு

குற்றவாளிகள் பொலிஸாருடன் நடப்பு “சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுப்பவர்கள் பொலிஸாருடன் நட்பாக இருப்பதால், பொலிஸாரிடம் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு மக்கள் அஞ்சுகின்றனர். இது ஆபத்தான நிலைமை.” - என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் 15ஆவது ஆண்டு நிறைவு விழா, கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி பயிற்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அறக்கட்டளையின் தலைவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளருமான மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர், அறக்கட்டளையின் 15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உருவாக்கப்பட்ட மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில்,

“2003ஆம் ஆண்டிலிருந்து இறுதிப்போர் வரையில் இந்த மாவட்டத்தில் மேலதிக மாவட்ட செயலராகவும், மாவட்ட செயலராகவும் பணியாற்றியிருக்கின்றேன். 2008ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் அளவில் எம்மை கிளிநொச்சி நகரிலிருந்து வெளியேறுமாறு இராணுவ அதிகாரிகள் அறிவுறுத்தினர். அதன் பின்னர் நாம் இங்கிருந்து இடம்பெயர்ந்து தருமபுரம் விளையாட்டு மைதானத்தில் ஓலைக்கொட்டில் அமைத்து அங்கிருந்து மாவட்ட செயலகத்தை இயக்கினோம். அப்போதும் இரவு நேரத்தில் இந்த மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக்கான செயற்பாடுகள் தொடர்பில் இங்குள்ள பலருடனும் கலந்துரையாடியிருக்கின்றேன்.

இறுதிப் போர் முடிந்து இங்கு மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் எல்லாவற்றையும் இழந்த நிலையில் இருந்த அவர்களுக்கு கல்வியைப் பெற்றுக்கொள்வது பெரும் சிரமமாக இருந்தது. அந்த நேரத்தில் மக்களுக்கு இந்த அறக்கட்டளை கைகொடுத்தது.

2010ஆம் ஆண்டு நான் முல்லைத்தீவு மாவட்ட செயலராகப் பதவியேற்றேன். அங்கும் இந்த மாதிரியான நிலைமையே இருந்தது. பல்கலைக்கழக அனுமதி கிடைத்த பலர், கல்வியைத் தொடர முடியாதளவுக்கு அவர்களின் வறுமைச் சூழல் இருந்தது. அதனால் பலர் பல்கலைக்கழக கல்வியைத் தொலைக்க வேண்டியிருந்தது. முல்லைத்தீவில் கல்வி நிதியம் ஒன்றை ஆரம்பித்தாலும், அங்கு இருந்த தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. அவ்வாறான சூழலில், இந்த அறக்கட்டளையின் தலைவராக இருக்கின்ற மருத்துவ கலாநிதி சத்தியமூர்த்தியுடன் இருந்த தொடர்பு காரணமாக, முல்லைத்தீவைச் சேர்ந்த மாணவர்களுக்கும் உங்களின் அறக்கட்டளை ஊடான உதவிகளைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றேன்.



இந்த உதவிகள் தொடரவேண்டும். வெளிநாட்டிலிருப்பவர்கள் தொடர்ந்து எமக்கு நிதி வழங்கிக் கொண்டிருக்க முடியாது. இன்று உதவிகளைப் பெற்று உயர் நிலையை அடையும் ஒவ்வொவரும் தாமும் உதவிகளைச் செய்து மற்றையவர்களை வளர்த்து விட வேண்டும். அதன்மூலம்தான் இந்த அறக்கட்டளை தொடர்ச்சியாகச் செயற்படக் கூடியதாக இருக்கும். அந்தப் பொறிமுறையை பின்பற்றுகின்றார் என நம்புகின்றேன்.

அன்றைய போர்ச் சூழலிலும் கல்விக்கான வசதிகள் உள்ளிட்ட சகல சேவைகளும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன. வளங்கள் குறைவாக இருந்தாலும் மக்களின் தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்தோம். இன்று வளங்களும், தொடர்பாடலும் பெருகிவிட்டாலும் மக்களுக்கான சேவைகள் என்பது அருகிவிட்டது. அன்றைய எமது சேவைகளுக்கும் இன்றைய காலத்துச் சேவைகளுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. இன்று பொதுமகன் அரச திணைக்களத்துக்குச் சென்றால் அரசாங்க அதிகாரிகள் பந்தடிப்பதுபோன்று அலைக்கழிக்கின்றனர். அல்லது இழுத்தடிக்கின்றனர். போர்க்காலத்தில் பணியாற்றியவர்கள் மக்களுக்குச் சேவை செய்யும் நோக்குடன் பணியாற்றினார்கள். இன்று அப்படியல்ல.

கடந்த காலங்களில் அரசியலுக்காக ஒரு சில அரச தொழில்கள் உருவாக்கப்பட்டன. தொழிலுக்காக சம்பளம் வழங்கவில்லை. சம்பளம் வழங்க வேண்டும் என்பதற்காக அரச தொழில்கள் உருவாக்கப்பட்டன. இதனால் உருவாகிய அரச அதிகாரிகள் பலர் தங்கள் சேவைகளை வினைத்திறனுடன் முன்னெடுக்கின்றார்கள் இல்லை.

ஏழையைக் கண்டால் உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் இயல்பாக மனதில் எழவேண்டும். அப்படிச் சிந்திப்பவர்கள் இன்று குறைவு. ஏழைக்குச் செய்யும் சேவையும், பிரதிபலனை எதிர்பார்க்காமல் செய்யும் சேவையும்தான் மிகப்பெரிய சேவை.” - என்றார்.

இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரனும் கலந்துகொண்டார்.

அறக்கட்டளையின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியவர்கள் இந்த நிகழ்வில் ஆளுநரால் கௌரவிக்கப்பட்டனர்.





# பங்களாதேஷுடன் செயற்கை துணி உற்பத்தியில் முதலீடு செய்ய நாட்டம் காட்டும் இலங்கை



பங்களாதேஷில் கூட்டு முயற்சிகளில், குறிப்பாக இரு நாடுகளிலிருந்தும் முதலீட்டாளர்களுக்கு குறிப்பிடத்தக்க ஆற்றலைக் கொண்ட செயற்கை துணி உற்பத்தியில் முதலீடு செய்ய இலங்கை விருப்பம் தெரிவித்துள்ளதாக பங்களாதேஷிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் தர்மபால வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

டாக்கா வர்த்தக மற்றும் தொழில்துறை சபையின் தலைவர் தஸ்கீன் அஹமட்டை தலைநகரில் உள்ள அந்த சபையின் அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதாரம், சுற்றுலா, பெரிய விருந்தகங்கள், தகவல் தொழில்நுட்பம், கல்வி மற்றும் மருந்துகள் உள்ளிட்ட கூட்டு முயற்சி முதலீடுகளுக்கான வாய்ப்பு தொடர்பில் தர்மபால வீரக்கொடி விளக்கமளித்துள்ளார்.

பங்களாதேஷுடன் இலங்கையும் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளன எனவும், பல ஆண்டுகளாக வலுவான மற்றும் நட்புரீதியான இருதரப்பு இராஜதந்திர உறவைப் பேணி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் உள்ளூர் சுற்றுலாத் துறையை மேம்படுத்த இலங்கையின் அனுபவத்தையும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் பயன்படுத்திக் கொள்ளுமாறு பங்களாதேஷிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் தர்மபால வீரக்கொடி பங்களாதேஷ் தொழில்முனைவோரை வலியுறுத்தினார்.

இலங்கை ஏற்கனவே பல நாடுகளுடன் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதாகவும், இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேலும் விரிவுபடுத்துவதற்காக பங்களாதேஷுடனான பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு




மார்ச் மாதம் 1 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை நாட்டிற்கு 97,322 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இவ்வருடம் இதுவரையான காலப்பகுதியில் 5,90,300 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, இந்தியாவிலிருந்து 93,951 சுற்றுலாப் பயணிகளும் ரஷ்யாவிலிருந்து 77,608 சுற்றுலாப் பயணிகளும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 56,103 சுற்றுலாப் பயணிகளும் ஜேர்மனியிலிருந்து 41,366 சுற்றுலாப் பயணிகளும் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.







# 3 மில்லியன் சுற்றுலாப்பயணிகளை நாட்டிற்கு அழைத்து வர எதிர்பார்ப்பு

இலங்கை ஈர்ப்புள்ள சுற்றுலாத் தலமாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தரமான உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவது அவசியம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

எனவே, இந்த விடயத்தில் விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

சுற்றுலா அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இந்த ஆண்டு பாதீட்டில் சுற்றுலா அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அதன் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அதிகாரிகள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

சுற்றுலாத் துறையில் புதிய முன்னெடுப்பாக இந்த ஆண்டு 03 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு அழைத்து வர எதிர்பார்க்கப்படுவதோடு அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்துவது குறித்தும் இதன்போது பரவலாக ஆராயப்பட்டது.









# அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தேங்கியுள்ள 400 வாகனங்கள்

நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட சுமார் 400 வாகனங்கள் விடுவிக்கப்படாது தற்போது அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தேங்கியுள்ளன என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சம்பத் மெரேஞ்சி இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

வாகன இறக்குமதியின் போது விதிக்கப்பட்ட தவறான நிபந்தனையே இதற்கான காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எதிர்வரும் வருடங்களில் கண்டி நகரை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை



சுற்றுலாத் துறையை மையப்படுத்தி எதிர்வரும் சில வருடங்களில் கண்டி நகரை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்தார்.

கண்டி நகரின் அபிவிருத்தி குறித்து, அண்மையில் நடைபெற்ற கண்காணிப்பு மற்றும் கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தென் ஆசியாவின் மிகப் பெரிய கட்டடமாகக் கருதப்படும், கண்டி போகம்பர சிறைச்சாலை வளாகத்தை அபிவிருத்தி செய்வதும் இத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் ஆகும், என்றும் பிரதி அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அதன்படி, மகாநாயக்க தேரரின் அறிவுறுத்தல்களின் படி தொல்பொருள் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட நிறுவனங்களுடன் இணைந்து இது தொடர்பான திட்டங்களைத் தயாரித்து வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் கடந்த ஆண்டு டிசம்பர் கடைசி வாரத்தில் மாவை சேனாதிராஜாவை தலைமை பதவியில் இருந்து இறக்கும் முடிவை எடுத்த கட்சியின் மத்திய குழு, அதே கூட்டத்தில் மருத்துவர் சிவமோகனைக் கட்சியிலிருந்து இடை நிறுத்தவும் முடிவு எடுத்திருந்தது.

அதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு கோரி சிவமோகன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை, வழக்காளி தரப்பு பிரசன்னத்துடன் மட்டும் பரிசீலித்த யாழ் மாவட்ட நீதிமன்றம் அந்த இடைக்காலத் தடை உத்தரவை வழங்க மறுத்துவிட்டது. அத்தகைய உத்தரவு வழங்குவதற்கான நியாயமோ, முகாந்திரமோ வழக்கின் முகத்தோற்றத்தில் கூட இல்லை என்று யாழ் நீதிமன்றம் உத்தரவிட்டு விட்டது. அதே சமயம் அந்த வழக்குத் தொடர்பில் எதிராளிகளுக்கு அழைப்பாணை அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் கட்சியின் பதில் தலைவரான சி.வி.கே.சிவஞானம், கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த மருத்துவர் சத்தியலிங்கம், நிர்வாக செயலாளரான குலநாயகம் ஆகியோரோடு நான்காவது எதிராளியாக சிறிதரன் எம்.பியின் பெயரை வழக்காளி சிவமோகன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்குக்கு இப்போதுதான் எதிராளிகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னமுமே எதிராளிகள் இந்த வழக்குத் தொடர்பான தங்கள் ஆட்சேபனையையோ, பிரதிபலிப்புகளையோ காட்டவில்லை.ஆனால் நான்காவது எதிராளியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் சிறிதரன் மட்டும் வழக்காளியின் வழக்கு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள முழு விடயங்களையும் தாம் அப்படியே ஏற்றுக் கொள்கின்றார் எனவும், வழக்காளி கோரும் சகல நிவாரணங்களும் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கும் தமது தரப்பு பதில் மனுவையே விழுந்தடித்து நீதிமன்றில் தாக்கல் செய்து விட்டார்.

எந்த அடிப்படையில் இந்த வழக்கில் சிறிதரன் எதிராளியாகச் சேர்க்கப்பட்டார் என்ற பிரச்சினை வழக்கில் எழக் கூடிய சாத்தியம் ஒரு புறம் இருக்கையில், கட்சி ரீதியாக சிவமோகனை இடைநிறுத்தும் முடிவை கட்சியின் மத்திய குழு எடுக்க, அதற்கு எதிரான சிவமோகனின் வழக்கு நிலைப்பாடு அனைத்தையும் அப்படியே ஏற்று அங்கீகரித்து, அவர் சார்பான நிலைப்பாட்டை சிறிதரன் எடுத்திருக்கின்றமை கட்சி மத்திய குழுவில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

மத்திய குழுவின் அடுத்த கூட்டத்தில் – பெரும்பாலும் உள்ளாட்சித் தேர்தல் முடிவுற்ற பின்னர் கட்சியின் மத்திய குழு கூடும் போது – இந்த வழக்கு விடயத்தில் சிறிதரனின் நிலைப்பாடு பிய்த்து உதறப்படும் என எதிர்பார்க்கலாம்.

எனினும், அதற்கு முன்னர் இன்று இந்த வழக்கு நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்படும் போது, முதல் மூன்று எதிராளிகள் சார்பிலும் ஆஜராக இருக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த வழக்கில் நான்காவது எதிராளியாக சிறிதரன் சேர்க்கப்பட்டமையில் தொடங்கி, அவரது பதில்மனுத் தாக்கல் செய்யப்பட்டமை, அதில் உள்ள விடயங்கள் வரையில் சட்ட ரீதியாக பிய்த்துதற வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிகிறது.

வழக்காளி தரப்பு சட்டத்தரணி குருபரனும், சிறிதரனின் சட்டத்தரணியும் அதனை எப்படிச் சமாளிப்பர் என்பதும் சுவாரஸியமாக இருக்கும்.

இன்று வழக்கு பரிசீலனைக்கு எடுக்கப்படும் போது பல திருப்புமுனை விடயங்கள் வரக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இருந்து பார்ப்போம்.

## 2 மீனவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாலை 3 மணிக்கு ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்கு தளத்தில் இருந்து தோமஸ் டக்ளஸ் என்பவரின் படகில் இரண்டு மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். ஆனால், அந்த இருவரில் எவரும் இன்னும் கரைக்குத் திரும்பவில்லை என யாழ்ப்பாணம் மாவட்ட நீரியல் வளத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

காணாமல்போன மீனவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## தென்னக்கோனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதன்கிழமை அறிவித்திருந்தது.

இந்நிலையில், இந்த ரிட் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் நீதிவான் மொஹமட் லபார் தாஹிர் மற்றும் சரத் திஸாநாயக்க ஆகியோரால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## பட்டலந்தை போல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது பேசுபொருளாக ஊடகங்களிலும் நாடாளுமன்றத்திலும் சர்வதேசத்திலும் உரத்து ஒலித்துக் கொண்டிருக்கும் 1988 ஆம் ஆண்டு இயங்கிய பட்டலந்த சித்திரவதை முகாம் இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

ஜே.வி.பி. இரண்டாம் கட்டப் போராட்டத்தை மேற்கொண்டபோது அவர்களை அடக்குவதற்காகச் சட்டவிரோதமாக இந்த முகாம் செயற்பட்டு வந்திருக்கின்றது மாத்திரமல்ல முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் உச்சரிக்கப்பட்டுள்ளது.

1994 சந்திரிகா ஆட்சிக்கு வந்தபோது இந்த பட்டலந்த முகாம் தொடர்பாக விசாரணை நடைபெற்றது. ஆனால், விசாரிக்கப்பட்ட கோவை திறக்கப்படாமல் இருட்டில் புதைத்து வைக்கப்பட்டிருக்கின்றதுடன் உண்மைகளும் புதைக்கப்பட்டுள்ளன.

37 ஆண்டுகளுக்குப் பின்னர் ஜே.வி.பியினர் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் புதைக்கப்பட்ட உண்மைகள் புதைகுழியிலிருந்து வெளியில் வந்துள்ளன.

இந்த ஜே.வி.பி. என்ற தேசிய மக்கள் கட்சி ஆட்சிக்கு வராவிட்டால் இந்தப் பட்டலந்த சித்திரவதை முகாம் வெளியில் வந்திருக்காது. ஆகவே, பாதிக்கப்பட்டவர்கள் இப்போது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதால்தான் இந்த சித்திரவதை முகாம் வெளியில் வந்திருக்கின்றது. எனவே, இதுபோன்ற வடக்கு, கிழக்கில் பல சட்டவிரோத முகாம்கள் காணப்பட்டன.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயங்கிய மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படைமுகாமில் 4 கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகள், முதியோர்கள், பெண்கள் உட்பட 186 பொதுமக்களைச் சித்திரவதை செய்து பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்து ஒரே இரவில் படுகொலை செய்து குழிகளில் போட்டு நிரப்பினார்கள். அதில் ஒருவர் வெட்டுக்காயங்களுடன் தப்பி வெளிவந்து உண்மைகளைத் தெரிவித்தார்.

இந்தச் சத்துருக்கொண்டான் முகாம் சித்திரவதை படுகொலை காணாமல் ஆக்கப்படுவதற்கு முக்கியமான முகாமாக இயங்கியது. அவ்வாறே பல முகாம்கள் இயங்கியதுடன் கொண்டு செல்லப்படுபவர்கள் திரும்பிவராதளவுக்கு கல்லடி, கரடியனாறு, கொண்டைவெட்டுவான், உட்பட பல முகாம்கள் காணப்பட்டன.

ஜே.வி.பியினர் பாதிக்கப்பட்ட விடயம் அவர்கள் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது. ஏன் என்றால் தங்களுடைய தோழர்கள், சகாக்கள் கொல்லப்பட்ட விதம், சித்திரவதை செய்யப்பட்ட விதம், அதில் பங்கு கொண்ட முக்கிய புள்ளிகள் தொடர்பாக வெளியில் வந்துள்ளது.

சித்திரவதை என்பது சாதாரண விடயமல்ல. அமிலத் தொட்டிகளில் இளைஞர்களைப் போட்டு கொலை செய்துள்ளனர்.

எங்களைப் பொறுத்தமட்டில் வடக்கு, கிழக்கில் தமிழர்கள் சார்பாகச் செயற்படுகின்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்பே இல்லை. எண்ணிக்கை ரீதியாக சிறுபான்மையாக உள்ளதால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது.

எனவே, எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் மற்றும் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களது நீதியை வெளியில் கொண்டு வரமுடியாது. ஆனால், 37 வருடங்களுக்குப் பின்னர் ஆட்சியைக் கைப்பற்றியதால்தான் இந்தச் சித்திரவதை முகாம் வெளி உலகத்துக்கு வந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட சித்திரவதை, பாலியல், பலாத்காரம் போன்ற அநீதிகளை வெளியில் கொண்டு வருவதாக இருந்தால் நாங்களும் ஆட்சியைக் கைப்பற்றினால்தான் முடியும். ஆனால், நாங்கள் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது.

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட படுகொலை, சித்திரவதை, அநியாயம், அராஜகத்தை வெளிக்கொண்டு வருவதற்கு வழியே இல்லை. எனவே, தேசிய மக்கள் சக்தி அரசிடம் நாங்கள் உருக்கமாகவும் நியாயமாகவும் கேட்பது உங்கள் தோழர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதற்காகப் பட்டலந்த சித்திரவதை முகாமை கொண்டுவந்திருப்பதாக மற்றவர்களுக்குக் கூறாமல் வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலும் இவ்வாறான படுகொலைகள், சித்திரவதைகள் நடந்துள்ளன போன்ற விடயங்களை நீங்கள் வெளிக்கொண்டு வருவதாக இருந்தால் நீங்கள் ஒரு சமத்துவவாதிகள்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் பட்டப்பகலில் 180 இற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இன்றும் கூட புதைக்கப்பட்ட புதைகுழி எது என்று தெரியாமல் உள்ளது. இவ்வாறு பல முகாம்களில் இப்படியான அநியாயங்கள் நடந்துள்ளன. ஆகவே, தேசிய மக்கள் சக்தியினர் பட்டலந்த முகாம் ஓர் ஆரம்பப் புள்ளியாக இருந்தால் வடக்கு, கிழக்கில் முகாம்களில் இடம்பெற்ற சித்திரவதைகளை வெளிக்கொண்டுவர வேண்டும்.”

– என்றார்.

# தனிமையில் வசித்து வந்த நபர் யாழ். நகரில் சடலமாக மீட்பு

(எஸ்.ரகுதீஸ்)



குடும்பத்தைப் பிரிந்து தனிமையில் வசித்து வந்த நபர் ஒருவர் யாழ்.நகரில் உள்ள நடைபாதையில் இருந்து சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மருதங்குளம், வவு னியாவைச் சேர்ந்த இராமன் யோகராசா (வயது 40) என அடை யாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்திற்கு அருகாமையில் உள்ள நடைபாதையில் உயிரிழந்த நிலையில் நேற்று முனதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசா ரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலி ஸார் நெறிப்படுத்தினர்.

# இந்த வருடத்தின் இதுவரையான காலத்தில் 25 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவு



இந்த வருடத்தின் இதுவரை 25 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதி வாகியுள்ளன.

அதில் 16 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டவை என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த 25 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் இதுவரை 11 பேர் உயி ரிழந்துள்ளனர்.

அத்துடன் பலர் காயமடைந்துள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள் ளது.

# கிராண்ட்பாஸில் துப்பாக்கிச் சூடு

## இருவர் காயம்



கொழும்பு, கிராண்ட்பாஸ் – நாகலகம் வீதியில் நேற்று இரவு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந் துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# மேர்வின் சில்வாவிற்கு மீண்டும் விளக்கமறியல்

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவை மார்ச் 24 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிரிபத்கொட பகுதியில் உள்ள அரசாங்க நிலத்தைப் போலி பத்திரங்களைப் பயன்படுத்தி விற்பனை செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் மூன்று பேர் கடந்த 5 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு விசாரணை நேற்று நீதிமன்றத்தில் எடுத் துக்கொள்ளப்பட்ட நிலையில் மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

## மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அமர்வின்போது புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

"எதிர்க்கட்சிகளைக் கேட்டு எமது தேர்தல் விஞ்ஞாபனத் தைத் தயாரிக்கவில்லை. அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் தேவைகளைக் கருத்தில்கொண்டு கொள்கைத் திட்டத்தைத் தயாரித்தோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாங் கள் நிச்சயம் நிறைவேற்றுவோம். எமது கொள்கைத் திட்டத்தை ஐந்து ஆண்டுகளுக்கு வரையறுத்து தயாரித்தோமே தவிர, ஆறு மாதங்களுக்குள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதா கக் குறிப்பிடவில்லை.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஊழல், மோசடி தடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் உட்பட அரச நிறுவனங்கள் சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர் தலைமறைவாகியுள்ளார். ஏனைய அரசுகளாயின் அவர் பாதுகாக்கப்பட்டிருப்பார். குற்றவாளிக ளைப் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்குக் கிடையாது.

சிறந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே நாங்கள் செயற்படுகின்றோம். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பணிகளை உரிய காலத்தில் நாங்கள் முன்னெடுப்போம். மக் களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற் றுவோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பணிகளைப் புதிதாக ஆரம்பிக்கப் போவதில்லை. இடைநிறுத்தப்பட்ட காலத்தில் இருந்தே ஆரம்பிப்போம். ஆகவே, இந்த விடயத்தில் நாங்கள் அவசரப்படப் போவதில்லை. எதிர்க்கட்சிகளின் கலக்கத்துக்கு அமைய நாங்கள் செயற்படப் போவதில்லை." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அரசின் இயலாமை

சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு தாக்குதல் நடவடிக்கையின் அரசியல் அதிர்வுகள் இன்னமும் உணரப்படுகின்ற நிலைமை நீடிக்கின்றது.

இந்த விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்பட்டு, உண்மைகள் அம்பலப்படுத்தப்பட்டு, பொறுப்பு கூறல் நடைமுறைப்படுத்தப்படும் வரை விடுவது இல்லை என கத்தோலிக்கத் திருச்சபை ஒற்றைக் காலில் மிக உறுதியாக - பிடிவாதமாக - நிற்கின்றது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் அதிகாரத்திலிருந்த ஜனாதிபதிகள் மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இவ்விடயத்தின் உண்மையைக் கண்டறிந்து வெளிக் கொணரும் விவகாரத்தில் முழு ஈடுபாட்டுடன் நடக்கவில்லை எனக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறை கூறி வருகின்றார்.

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற அநுரகுமார திஸநாயக்க இந்த விடயத்தில் ஏதோ சாதிப்பார் என எதிர்பார்த்து, அவருக்கு நிபந்தனையற்ற ஆதரவு தருபவர் போல கருத்து வெளியிட்ட கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித், இப்போது இந்த ஜனாதிபதியிலும் நம்பிக்கை கொண்டவராக தம்மை காட்டுவதில் இருந்து மெல்ல நழுவுகிறார் எனத் தெரிகிறது.

இந்தக் கொடூரத் தொடர் தாக்குதலின் ஐந்தாம் ஆண்டு நிறைவு எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதி வருகின்றது. அதற்கு முன்பாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதாக அரசு அளித்த வாக்குறுதியை அது நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் நாம் வீதியில் இறங்கப் பின்னிற்க மாட்டோம் என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

"இலங்கையிலுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்கிலேயே தற்போதைய ஆட்சியாளர்களை ஆட்சிப் பீடத்தில் ஏற்றினோம். ஆனால், அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்தாமலும் எமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமலும் இருந்து வந்தால் நாம் மீண்டும் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். அத்துடன் லஸந்த விக்ரமதுங்க கொலை, பிரதீப் எக்னெலியகொட காணாமல் ஆக்கப்பட்டமை, கீத் நொயர் தாக்கப்பட்டமை உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலும், உயிர்த்த ஞாயிறு தின குண்டு தாக்குதல் சம்பவம் தொடர்பிலும் நீதியை நிலை நாட்டுவதற்கு தற்போது ஆட்சிபீடம் ஏறியுள்ள அரசாங்கம் இனியும் காலம் தாழ்த்தக் கூடாது.

"இந்த விடயங்கள் தொடர்பான எந்தவொரு விவகாரத்தையும் இரகசியமாக வைத்துக் கொள்ளாமல், எவருடனும் 'டீல்' போடாமல், உண்மையை வெளியே கொண்டு வருவதற்கு அரசாங்கம் செயல்பட வேண்டும்" - என கர்தினால் கூறியுள்ளார்.

ஆனால் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை ஓரிரு மாதங்களில் பெற்றுக் கொடுத்து விட முடியாது என்ற உண்மையை - யதார்த்தப் புற நிலையை - அரசாங்கத்தின் சார்பில் விஞ்ஞான, தொழில்நுட்ப விவகார அமைச்சர் கிருஷாந்த அபேசேன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

இப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓரிரு மாதங்களில் நீதி நியாயத்தை பெற்றுக் கொடுத்து விட முடியாது என்ற உண்மையை அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற பின்னரே உணர்ந்து கொள்ள முடிந்தது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆயினும் இந்த மாதத்தில் இவ்விடயத்தில் செய்யக்கூடிய அனைத்தையும் செய்ய முயலுவோம் என்றும் அவர் சொல்லி இருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க அரசினால் கூட ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதலின் பின்னால் உள்ள உண்மைகளை கண்டு பிடிக்க முடியவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

அரசின் சார்பில் அவர் கூறும் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவை தான்.

எனினும் அதிகாரத்துக்கு வந்தால் வெட்டிப் பிடுங்குவோம் என்று முழங்கி, அதன் மூலம் ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியினரின் உண்மை அனுபவம் - பட்டறிவு - இயலுமை - யாது என்பதை இப்போது அமைச்சர் கிருஷாந்த அபேசேனவின் கூற்று ஊடாக - ஒப்புதல் வாக்குமூலம் வாயிலாக - உணர்ந்து கொள்ள முடிகின்றது என்பதுதான் இதில் புதைந்துள்ள உண்மை.




# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண் சாதனையாளர்கள் கௌரவிப்பு

சர்வதேச மகளிர் தினம் – 2025 ஐ முன்னிட்டு வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தால் பெண் சாதனையாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட சர்வதேச மகளிர் தினம் – 2025 நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மாணாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவ துறை பேராசிரியர் திருமதி ம.அ.சாந்தகுமாரி, சிறப்பு விருந்தினராக காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் மாவட்ட உதவி ஆணையாளர் திருமதி மாதுகி சஜீ ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.





விருந்தினர்கள் நிகழ்வு மண்டபத்திற்கு வரவேற்கப்பட்டதை தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் இடம்பெற்றது. பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் வரவேற்பு நடனத்தை தொடர்ந்து ஏனைய நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

இதன்போது வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டு தெரிவு செய்யப்பட்ட பெண் சாதனையாளர்கள் ஆறு பேர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

விளையாட்டுத்துறை சார்பில் பளுதூக்குதல் வீராங்கனை செல்வி சாணுஜா கோபாலகிருஸ்ணன், பாரம்பரிய கலை பிரிவில் உடுக்கு கலைஞரான திருமதி ஆனந்தி கணேசன், தற்பாதுகாப்புக் கலை பிரிவில் கராத்தே விராங்கனை திருமதி மாலதி முரளி, மாற்றுத்திறனாளி பிரிவில் சுயதொழில் முயற்சியாளர் திருமதி ராஜேஸ்வரி ஞானக்குமரன், யோகா கலை பிரிவில் திருமதி பத்மலோசனா அதிரூபசிங்கம் மற்றும் பெண் தொழில் முயற்சியாளர் திருமதி மோனறஞ்சன் தர்சினி ஆகியோர் இவ்வாறு பெண் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.










# தொழிற்சங்க நடவடிக்கையால் மூடப்பட்ட தபால் நிலையங்கள்

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

நாடளாவிய ரீதியில் தபாலகங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளினால் மூடப்பட்டமையால் நேற்றைய தினம் திங்கட்கிழமை அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது தபால் நிலையம், சம்மாந்துறை தபால் நிலையம் ஆகியனவும் மூடப்பட்டிருந்தன.

இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு இன்றும் நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பணி பகிஸ்கரிப்புக் காரணமாக அம்பாறை மாவட்டப் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர்.



# வவுனியாவில் 3 சபைகளில் போட்டியிட மக்கள் போராட்ட முன்னணி கட்டுப்பணம்





**(கி.வசந்தன்)**

வவுனியா மாநகரசபை உள்ளிட்ட மூன்று சபைகளில் போட்டியிட மக்கள் போராட்ட முன்னணி நேற்று வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் நாளை 19 ஆம் திகதி வரை கட்டுப் பணம் செலுத்த முடியும்.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, சிங்களப் பிரதேசசபை ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் இந்த முன்னணி போட்டியிடவுள்ளது.

அதற்கான கட்டுப்பணத்தை அந்த அமைப்பின் வன்னி மாவட்ட முக்கியஸ்தர் என்.பிரதீபன் மற்றும் காமினி போன்றோர் செலுத்தியிருந்தனர்.



# வவுனியா தேவகுளத்தில் இளைஞரின் சடலம் மீட்பு

**(கி.வசந்தன்)**

வவுனியா, தேவகுளம் வயல்வெளியில் இளைஞர் ஒருவரின் சடலம் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மறவன்குளம் பகுதியைச் சேர்ந்த முனிரத்தினம் கருணா என்ற 23 வயது இளைஞரே இவ்வாறு வயல் வெளியில் சடலமாக மீட்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபரின் சடலம் காணப்படும் பகுதிக்கு அருகில் அவர் கொண்டு வந்த பை, பாதணி மற்றும் தலைக் கவசம் காணப்படுவதோடு அந்தப் பகுதிக்கு வெளியில் உள்ள வீதியில் மோட்டார் சைக்கிளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சடலத்தை நேற்றுக் காலை அவதானித்த ஊரவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் அவர்கள் சடலத்தை மீட்டனர்.

இந்த மரணம் தொடர்பான மேலதிகவிசாரணைகளைஈச்சங்குளம்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா மாநகரசபை உட்பட 4 சபைகளுக்கு ஜனநாயகத் தேசியக் கூட்டணி கட்டுப்பணம்!



**(கி.வசந்தன்)**

வவுனியா மாநகரசபை உள்ளிட்ட நான்கு சபைகளில் போட்டியிடுவதற்காக ஜனநாயக தேசியக் கூட்டணி வவுனியா மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் நாளை 19ஆம் திகதி வரை கட்டுப் பணம் செலுத்தமுடியும் எனத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் இந்தக் கூட்டணி போட்டியிடவுள்ளது.

அதற்கான கட்டுப்பணத்தை சிறி தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் ப.உதயராசா தலைமையிலான குழுவினர் செலுத்தியிருந்தனர்.



# நாட்டின் கடற்றொழில்துறையை நவீன மயப்படுத்த நடவடிக்கை!

நாட்டின் கடற்றொழில்துறை நவீன மயப்படுத்தப்படும் எனவும், ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கை ஊக்குவிக்கப்படும் எனவும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராம லிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட மீனவக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் ராஜா குரூஸ், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளர் மொஹமட் ஆலம், வட மாகாண கடற்றொழில் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா ஆகியோர், அமைச்சரை யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் பொது மக்கள் தொடர்பாடல் அலுவலகத்தில் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

தமிழக மீனவர்களின் அத்துமீறலால் மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், மீன்பிடி சட்டம் திருத்த வரைவு, உள்ளூர் மீன்பிடியில் தடை செய்யப்பட்டுள்ள மீன்பிடி நடவடிக்கை என்பன தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு, இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைமடி மீன்பிடியை வெளிப்படுத்தும் ஆவணப்படம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் ஒப்படைக்கப்படுவதற்காக அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் கூறியவை வருமாறு:-

"இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் ஆவணப் படமொன்றை தயாரித்துள்ளனர். அதனை எனக்குக் காண்பித்தனர்.

அதேபோல இந்திய மீனவர்கள் எமது நாட்டுக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதுபோல, உள்நாட்டிலுள்ள சிலரும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமையை கடைபிடிக்கின்றனர். எனவே, இவற்றை தடுத்து நிறுத்தி, எமது நாட்டின் கடல் வளம் பாதுகாக்கப்படும்.

அதேபோல் கடற்றொழிலை நவீன மயமாக்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். ஆழ்கடல் மீன்பிடிக்காக கப்பல்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு வெளிநாடுகள் முன்வந்துள்ளன. அவை ஊடாக ஆழ்கடல் மீன்பிடி ஊக்குவிக்கப்படும்." - என்றார்.





# ஏறாவூரில் பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கியவருக்கு 27 வரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை ஹோட்டல் ஒன்றில் உணவு சாப்பிட்டு கொண்டிருந்தபோது ஆண் ஒருவர் தாக்கியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 30 வயதுடைய ஆணை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் நேற்றுத் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

இதுபற்றி தெரியவருவதாவது:-

இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் நோன்பு முடிப்பதற்காக நேற்று அதிகாலை சாப்பிடுவதற்காக அந்த ஹோட்டலுக்குச் சென்று மேசை ஒன்றில் இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த போது அங்கு சாப்பிடுவதற்காகச் சென்ற இளைஞனின் கால் சாப்பிட்டுக் கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரின் மோசைக்காலில் தட்டுப்பட்டதையடுத்து மேசையில் கப்பில் இருந்த தண்ணீர் சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனையடுத்து தெரியாமல் தட்டுப்பட்டுவிட்டது என பொலிஸாரிடம் மன்னிப்புக் கோரிய நிலையில் இருவருக்கும் இடையே வாய்தர்கம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியதையடுத்து பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனை தொடர்ந்து பொலிஸாரைத் தாக்கிய இளைஞன் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கபட்ட நிலையில் அவரைப் பொலிஸார் கைது செய்து அவருக்கு எதிராக ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் குற்றப்பத்திரிக்கை ஒன்றைத் தாக்கல் செய்தனர். நீதிவான் வைத்தியசாலைக்குச் சென்று இளைஞனை பார்வையிட்ட பின்னர் அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.




# தாதியர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம்

**(கி.வசந்தன்)**

வரவு - செலவுத் திட்டத்தில் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தாதியர்களின் பதவி உயர்வில் இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரியும் நாடளாவிய ரீதியில் உள்ள பெரும்பாலான அரசாங்க வைத்திய சாலைகளில் தாதியர்கள் நேற்றுப் பகல் 10.00 மணி முதல் 1.00 மணி வரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டமையுடன் 12.00 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

அந்த வகையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவுக்கு முன்பாகவும் தாதியர்களினால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் தாதியர்கள் பகல் 10.00 மணி முதல் 1.00 மணி வரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த போதிலும் நோயாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவசர நோயாளர் பிரிவு, விபத்துப்பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு உட்பட்ட சில சேவைகளில் மட்டுப்படுத்தப்பட்ட தாதியர்கள் சேவைகளில் ஈடுபட்டிருந்தமையுடன் ஏனைய சேவைகளிலிருந்து 3 மணிநேரம் தாதியர்கள் விலகியிருந்தனர்.













# வட மாகாணத்தில் நில ஆக்கிரமிப்பின் எல்லைக் கற்களாக புத்தர் சிலைகள்!

## பௌத்த பிரதிபலிப்பான தொல்லியல் திணைக்களம் நாட்டில் எவ்வாறு சகல மதங்களையும் நடுநிலையுடன் கையாளும் என ரவிகரன் கேள்வி

(பா.சதீசன்)




காவி உடை உடுக்கவே பொருத்தமில்லாத சிலரால் வடக்கில் புத்த பெருமானின் திருவுருவச்சிலைகள் நிலஆக்கிரமிப்பின் எல்லைக் கற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன எனவும், வடபகுதியில் நீதிமன்ற கட்டளைகளை மீறி, அத்துமீறி கட்டியெழுப்பப்படும் விகாரைகள் பௌத்த சின்னமல்ல, ஊழலின் சின்னமெனவும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை பௌத்த விகாரை ஒன்றையும், அசோகச்சக்கரத்தையும் தனது சின்னமாக கொண்ட இலங்கை தொல்பொருள் திணைக்களம், எவ்வாறு இலங்கையில் உள்ள எல்லா மதத்தவர்களின் தொல்லியலையும் நடுநிலமையுடன் கையாளக் கூடிய திணைக்களமாக இருக்கமுடியும் எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அமைச்சின் மீதான வரவு – செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதேவேளை முல்லைத்தீவு – நாயாறு நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலை விவகாரம், கொக்கிளாயில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள விகாரை விவகாரம், குருந்தூர்மலையில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள விகாரை விவகாரம், வவுனியா வடக்கில் தமிழ் மக்களின் வழிபாடுகள் தடுக்கப்படுகின்ற விவகாரங்கள் உள்ளிட்ட விடயங்களை சுட்டிக்காட்டி இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

தற்போது அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இனவாதக் கருத்துக்களைத் தெரிவிக்காது, எல்லோரையும் அணைத்துக்கொண்டு செல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் செயற்படுவதை அவதானிக்கமுடிகின்றது.

குறிப்பாக பெரும்பான்மையின மக்களில் பெரும்பாலானவர்கள் கூட இனவாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்குச் சான்று தற்போதைய அரசாங்கமாகும். இதற்கு முன்னர் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம்கொண்டிருந்த தற்போதய அரசாங்கம் 159 ஆசனங்களைப் பெற்று ஆட்சிபீடத்திலுள்ளீர்கள். இதற்கு முன்னர் இருந்த சில இனவாதிகள் நீக்கப்பட்டுள்ளனர்.

நான் வன்னித் தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர். முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவன். அந்தவகையில் அங்கு இடம்பெற்ற, இடம்பெறும் பிரச்சினைகளைத் தெளிவாகச் சொல்கின்றேன்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்குடன்தான் நாம் செயற்படுகின்றோம். அந்த வகையில் உங்களின் ஒத்துழைப்பை நாடுகின்றோம்.ஒருநீதியானதும்,நேர்மையானதுமான ஆட்சி அமைந்து நாடு முன்னேற்றம் அடையும் விடயத்தில் எமக்கு மாற்றுக் கருத்தில்லை. அதற்கு எமது ஒத்துழைப்புக்களும் இருக்கும்.

இந்துத் தம்பதிகளான சுத்தோதனருக்கும் மாயாதேவிக்கும் பிறந்து, யசோதரையைத் திருணம்செய்த சித்தாத்தரே புத்தபிரான் ஆவார். அவரது போதனைகளைப் பின்பற்றி அவரது பஞ்சசீலக் கொள்கைகளின் அடிப்படையில் ஒழுகுவோர் பௌத்தர்கள் எனப்பட்டனர். இந்துமதமும், பௌத்த மதமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. தென்ஆசியாவின் பிரதான மதங்களான இவை, தெனாசியா எங்கும் இணைமதங்களாகவே அனுஷ்டிக்கப்படுகின்றன. ஒத்திசைவுடன் ஓம்பப்படுகின்றன.

ஆனால் இலங்கையில் மட்டும் அவ்வாறு இல்லை. இங்கு புத்தபிரானின் போதனைகளையும் அவரது பஞ்சசீலக் கொள்கைகளையும் கைவிட்ட சில பௌத்த துறவிகள் அவர்களின் பின்நின்று இயக்கும் சில அரசியல்வாதிகளின் தயவுடன் இந்தநாட்டில் அமைதியின்மையையும், இனமுறுகலையும் தொடர வேண்டும் என நினைத்து வரும் சில ஏகாதிபத்தியவாதிகளின் தயவால் எதேச்சதிகாரம் பெற்று, சட்டத்தையும், ஒழுங்கையும் கையிலெடுத்து, தமிழர் பகுதிகளில் பல்வேறு எதேச்சதிகாரங்களைப் புரித்து, இலங்கையில் மதநல்லிணக்கத்தை இல்லாதொழிதுள்ளார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கஎின் இனப்பரம்பல் வீதத்தை மாற்றி அமைக்க முயலும் பேரினவாத சக்திகளின் ஊதுகுழல்களாக செயற்பட்டு வரும் இந்த பௌத்தப் போக்கினைக் கடைப்பிடித்து வரும் சில பௌத்த பிக்குகள் இலங்கையின் அரச திணைக்களங்களான மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை தொல்பொருள் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், பாதுகாப்பு படைகள் என்பவற்றை வெளிப்படையாகவே வழிநடத்தி வருவது கடந்த காலத்தில் வெளிப்படையாகவே அவதானிக்கப் பட்டது.

(அ) நீராவியடிப்பிள்ளையார் ஆலய விவகாரம்:–

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில், நாயாற்றுக்கு அண்மையில் உள்ள பழைய செம்மலை பிள்ளையார் ஆலயத்தை குருகந்த ரஜமகாவிகாரை எனக் கூறி கொலம்பகே மேதானந்த கீர்த்திசிறி தேரர் என்ற பௌத்ததுறவி, ஆலய வளாகத்திற்குள் கட்டடம் ஒன்றை அமைக்கத் தொடங்கினார். இக்கட்டட வேலைகளை இவ்ஆலயத்தின் எதிர்த் திசையில் இருந்த இராணுவமுகாமின் இராணுவத்தினர் மேற்கொண்டனர். இதுதொடர்பில் 31823 இலக்கத்தில் வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றில் நடைபெற்று 2019.05.06இல் வழங்கப் பட்ட கட்டளைப்படி குறித்த இடத்தில் ஏனும்செயற்பாடுகள் செய்வதானால் சமாதானத்தைப்பேணி நாட்டில் உள்ள சட்டதிட்டங்களுக்கு அமைய மேற்கொள்ளப்படவேண்டும் என நீதிமன்றால் கட்டளையிடப்பட்டது. இருந்தபோதும் பிரதேசசபையின் தடைஉத்தரவையும் மீறி இவ்ஆலயத்தில் கொலம்பகே மேதானந்த கீர்த்திசிறீ தேரரால் பிரமாண்டமான புத்தர் சிலை ஒன்று வைக்கப் பட்டது. நீதிமன்ற கட்டளையைமீறிய இந்த நடவடிக்கையை இந்தநாட்டின் சட்டம் ஒழுங்கு வேடிக்கை பார்த்திருந்தது.

சில நாள்களின் பின்னர் இந்த கொலம்பகே மேதானந்த கீர்த்தி சிறீ தேரர் மரணமடைந்தார். இவரது உடலை கடற்கரையில் அடக்கம் செய்யுமாறு முல்லைத்தீவு நீதிமன்றும் கட்டளையிட்டது. அந்தக்கட்டளையை மீறி ஞானசாரதேரர் தலைமையான பௌத்ததுறவிகள்குழு அவ்வுடலை பழைய செம்மலை பிள்ளையார் ஆலய தீர்த்தக்குளத்தில் அடக்கம் செய்தனர். எதிர்த்து நின்ற தமிழ்மக்களையும், சட்டத்தரணிகளையும் இலங்கைப் பொலிஸார் துரத்தி துரத்தி அடித்தனர். பொலிஸாரால் தாக்கப்பட்டு ஆலய பூசகர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார்.

இலங்கையில் மதநல்லிணக்கத் திற்கு பகிரங்கமாக வேட்டுவைக்கப்பட்ட

தொடர்ச்சி ▼

# வட மாகாணத்தில் நில ஆக்கிரமிப்பின் எல்லைக் கற்களாக புத்தர் சிலைகள்!

தொடர்ச்சி▲

பல்வேறு சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்றாகும்.

(ஆ) கொக்கிளாயில் அத்துமீறி அமைக்கப்பட்ட விகாரை விவகாரம் :-

முல்வைத்தீவு கொக்கிளாய் கிராமத்தில் நீதிமன்றக்கட்டளைகள் மீறப்பட்டு பௌத்தவிகாரை அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 1983இல் இடம்பெயர்ந்து, 2011இல்தான் இங்கு மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்பட்டார்கள். மணிவண்ணதாஸ் குடும்பமும் இங்கு மீள் குடியமர சென்றார்கள். மணிவண்ணதாஸின் தந்தையார் திருஞானசம்பந்தர். இவருக்கு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட காணியின் அனுமதிப்பத்திரம் உண்டு.

ஆனால் மணிவண்ணதாஸ் குடும்பம் இங்கு மீள்குடியமர அனுமதிக்கப்படவில்லை. அவரது குடும்பம் இராணுவத்தால் துரத்தியடிக்கப்பட்டது.

அந்தக் காணியில் விகாரை ஒன்று கட்டப்பட்டது. பல்வேறு தடையுத்தரவுகளையும் மீறி இன்றுவரை கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது. மணிவண்ணதாஸ் குடும்பம் இன்று வரை தமது சொந்தக்காணியில் மீள் குடியமர முடியவில்லை. தாம் பிறந்த மண்ண்ணில் ஏதிலிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

தாய், தந்தையை அன்புமனையாள் யசோதரை, அருமைப்பாலகன் இராகுலனைத் துறந்து போதிமரநிழலில் பரிநிர்வாணம்அடைந்த போதிமாதவன் புத்தபிரான் சிலையாய் அமர்வதற்காக மணிவண்ணதாஸ், அவரது மனைவி, குழந்தைகள், ஏதிலிகளாகத் துரத்தியடிக்கப்பட்டு அவர்களுடைய பரம்பரை வாழ்ந்த பூர்வீகநிலம் பறிக்கப்பட்டுள்ளது.

இதையா புத்தர்போதித்த பஞ்சசீலக் கொள்கை வழிநடப்பவர்கள் செய்வார்கள்? புத்தருடைய ஆன்மா இச்செயலால் வெட்கித்தலை குனிந்து நிற்கும். வடக்கிலும், கிழக்கிலும் ஞானசார தேரர், அவர் வழி நிற்கும் காவி உடை உடுக்கவே பொருத்தமில்லாத சிலரால் புத்தபெருமானின் திருவுருவச்சிலைகள் நிலஆக்கிரமிப்பின் எல்லைக்கற்களாக பயன்படுத்தப்படுகின்றன. கடவுளாக அல்ல.

(இ) குருந்தூர்மலை விவகாரம்:-

குருந்தூர்மலை, அது ஒரு தொல்லியல் பிரதேசம் என்பதனை நாம் அனைவரும் அறிவோம். விடுதலைப் புலிகளின் காலத்தில் அங்கிருந்த தொல்பொருள்சின்னங்களுக்கு இம்மியளவுகூட பங்கமேற்படவில்லை. அங்கு தொல்பொருள் சின்னங்களுள் ஒன்றாய் பல நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த திரிசூலம் ஒன்று காணப்பட்டது. அது பல நூற்றாண்டுகளாகவே சுற்றயல் கிராம மக்களால் வழிபடப்பட்டுவந்தது. கிராமியமுறையில் பொங்கல் செய்து படையலிட்டு பயபக்தியுடன் இம்மக்களால் வழிபடப்பட்டு வந்தது. ஆனால் இன்று பிடுங்கி எறியப்பட்டு இந்துமத வழிபாடுகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

அங்கு புத்தர்சிலை ஒன்றை வைப்பதற்காக கல்கமுவ சந்தபோதிதேரர் தலைமையிலான குழுவினர் ஒரு புத்தர்சிலையுடன் வாகனங்களில் வந்தபோது அப்பிரதேச மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதனால் அமைதிக்குலைவு ஒன்று அப்பிரதேசத்தில் ஏற்பட்டதென்று பொலிஸாரால் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. AR 673/18 இலக்கத்தில் நடைபெற்ற இவ்வழக்கின் மீதான கட்டளையானது 2018-09.27ஆம் திகதிய வழங்கப்பட்டது.

அக் கட்டளையில், இப்பிரதேசம் தொல்லியல் இடமாகக்காணப்படுவதாகவும், அப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கை கவனத்தில் கொள்ளப்பட்டு, யாழ்ப்பாண பல்கலைகழக தொல்லியல் விரிவுரையாளர்கள், தொல்பொருள் ஆராய்ச்சி மாணவர்கள் ஆகியோர் தொல்லியல் ஆய்வுகளில் இணைக்குமாறு தொல்லியல் திணைக்களத்திற்கு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

ஆனால் இன்றும் இப்பிரதேசத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் சமூகமின்மையுடன் தொல்லியல் ஆய்வுகள் தொடர்கின்றன. வெளிப்படைத்தன்மையையும், நடுநிலைமையையும் கோசமாகக்கொண்டு ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தின் காலத்திலும் குருந்தூர்மலையில் நீதிமன்றக்கட்டளைக்கு முரணாக வெளிப்படையற்ற செயற்பாடுகள் தொல்லியல்ஆய்வுகள் என்ற போர்வையில் தொடர்கின்றன.

குருந்தூர்மலையில் கல்கமுவ சந்தபோதி தேரரின் வழிகாட்டலில் தொல்பொருள் திணைக்களத்தினரால் இலங்கை பொலிஸாரினதும், இராணுவத்தினதும் உதவியுடன் மேற்கொளஎப்பட்ட அராஜகங்கள் பௌத்த தர்மத்திற்கு மட்டுமல்ல, இலங்கையின் தொல்பொருள் சட்டத்திற்கும் முற்றிலும் முரணானவை.

இது பற்றி இன்றும் விலாவாரியாக விவரிப்பதற்கு எனக்கு தரப்பட்ட நேரம்போதாது. ஒருதொல்பொருள் இடமாகக் காணப்பட்ட அந்தப்பிரதேசம் நீதிமன்றங்களின் பல்வேறு கட்டளைகளை மீறி, இலங்கையில் நடைமுறையில் இருந்து வருகின்ற தொல்பொருள் சட்டங்களையும் மீறி, தொல்பொருள் திணைக்களத்தால் ஒரு விகாரையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பல்வேறு தீர்ப்புகளை வழங்கிய முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாஅவர்கள் அச்சுறுத்தல்கள் காரணமாக தனது பதவியை துறந்து நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசால் தொல்லியல் இடமாக வர்த்தமானப்படுத்தப்பட்ட குருந்தூர் மலையில், தென்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட கபோக் கற்களாலும், சீமேந்தாலும் கட்டி எழுப்பப்பட்ட விகாரை ஒருபௌத்த சின்னமல்ல ஊழலின் சின்னமாகும். ஊழலுக்கு எதிரான கோசத்துடன் ஆட்சிக்கு வந்த இந்த அரசு இது தொடர்பில் என்ன பொறுப்புக்கூறப்போகின்றது?

குருந்தூர்மலைப் பிரதேசத்தில் இருந்து பிடுங்கிச் செல்லப்பட்ட ஆதி சிவனின்சூலம் மீளவும் இப்பிரதேச இந்துக்களிடம் ஒப்படைக்கப்படுமா? இங்கு தடையின்றி வழிபாடுகளைத் தொடர இந்துக்கள் அனுமதிக்கப்படுவார்களா?

(ஈ) வெடுக்குநாறிமலை விவகாரம்:-

வவுனியா மாவட்டத்தில், வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில் அமைந்துள்ள வெடுக்குநாறிமலை வன்னியில் வாழும் இந்துக்களின் ஆதிவழிபாட்டுத்தலமாகும். கடந்த வருடம் இங்கு சிவராத்திரி வழிபாட்டிற்காக சென்றிருந்த மக்கள் இலங்கைப் பொலிஸாரால் துரத்தியடிக்கப்பட்டனர். இங்கு வழிபாடு மேற்கொண்ட பரம்பரை பூசாரியும் இன்னும் 14பேர்களும் சிவராத்திரியை வெடுக்குநாறி மலையில் அனுஷ்டித்ததற்காக, இரண்டு வாரங்கள்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இந்தவருடமும் சிவராத்திரி பூசைகள் மாலை 06.00மணிக்கு பின் தொடர அனுமதிக்கப்படவில்லை.

இலங்கைத்தீவில் தமிழ் இனத்திற்கு எதிராக,அவர்களுடையவழிபாட்டுஉரிமை மறுக்கப்பட்டு, அவர்களுடைய மரபு உரிமைகள் சிதைக்கப்பட்டு. அம்மக்கள் நசுக்கப்பட்டு வரும் நிலைமை இன்னமும் தொடர்ந்து வருகின்றது. பௌத்த விகாரை ஒன்றையும், அசோகச் சக்கரத்தையும் தனது சின்னமாக கொண்ட இலங்கை தொல்பொருள் திணைக்களம், எவ்வாறு இலங்கையில் உள்ள எல்ல. மதத்தவர்களின் தொல்லியலையும் நடுநிலைமையுடன் கையாளக்கூடிய திணைக்களமாக இருக்கமுடியும்? இதுவே இலங்கையில் தொடரும் பௌத்த மேலாதிக்க ஆட்சியின் ஊழலின் சின்னம்.

இந்த நாட்டிலுள்ள இந்து, பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய நான்கு மதங்களையும் ஒன்றாகப் பாருங்கள். அனைத்துமத மக்களையும் அணைத்துகொண்டு பயணியுங்கள்.

குறிப்பாக வன்னியிலும், யாழப்பாணத்திலும் உள்ள மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்த அரசாங்கத்திற்கு அதிகளவில் தமது வாக்குகளை அள்ளி வழங்கினார்கள். சிங்கள மக்களையும், பெரும்பான்மையின மக்களையும், கட்சிகளையும் அவர்கள் வெறுத்திருந்தால் அவர்களால் எப்படி இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்திருக்க முடியும்? எனவே அந்த மக்களை புறக்கணிக்காதீர்கள்.

எமது வழிபாட்டிடங்களில் எம்மை வழிபடவிடுங்கள். அதேவேளை பௌத்தர்கள் அல்லாத இடங்களில் எதற்கு பாரிய பௌத்த விகாரைகள், இராணுவ முகாம்களில் பாரிய விகாரைகள் கட்டப்படுகின்றன? கடந்தகால ஆட்சியாளர்கள் இனவாதப் போக்குடன் – அராஜகமான போக்குடன் – செயற்பட்ட நிலைமைகளை இந்த அரசாங்கம் நீக்க வேண்டும். அமைச்சர் எமது பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள மதத் திணிப்புக்கள் தொடர்பில் நேரடியாக வந்து பார்வையிட வேண்டும். அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் – என்றார்.



# இந்தியா – நியூசிலாந்து இடையே பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்து

இந்தியா சென்றுள்ள நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன், பிரதமர் நரேந்திர மோடியை, டில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதையடுத்து, இரு நாடுகளுக்கு இடையே பாதுகாப்பு, கல்வி, சுற்றுச் சூழல், வேளாண், விளையாட்டு என பல்வேறு துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதன் தொடர்ச்சியாக, இரு தலைவர்கள் மற்றும் செய்தியாளர்கள் முன்னிலையில் இருதரப்பு ஒப்பந்தங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இரு தலைவர்களும் செய்தியாளர்களிடம் பேசினர். அப்போது பிரதமர் மோடி கருத்து தெரிவிக்கையில்,

“பயங்கரவாதத்துக்கு எதிராக நாங்கள் இருவரும் ஒருமித்த கருத்துடன் இருக்கிறோம். நியூசிலாந்தில் மார்ச் 15, 2019 அன்று நிகழ்ந்த கிறைஸ்ட் சர்ச் பயங்கரவாத தாக்குதலாக இருந்தாலும் சரி, நவம்பர் 26, 2008 அன்று நடந்த மும்பை தாக்குதலாக இருந்தாலும் சரி, எந்த வடிவத்திலும் பயங்கரவாதம் ஏற்றுக்கொள்ள முடியாதது. பயங்கரவாத தாக்குதல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை அவசியம். பயங்கரவாத, பிரிவினைவாத மற்றும் தீவிரவாத சக்திகளுக்கு எதிராக எங்களின் தொடர் ஒத்துழைப்பு இருக்கும்.

இந்தச் சூழலில், நியூசிலாந்தில் சில சட்டவிரோத சக்திகள் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்த இந்தியாவின் கவலையை நான் பகிர்ந்து கொண்டேன். இந்த சட்டவிரோத சக்திகளுக்கு எதிராக நியூசிலாந்து அரசாங்கத்திடமிருந்து இந்தியா தொடர்ந்து ஒத்துழைப்பைப் பெறும். இந்தியாவும் நியூசிலாந்தும் பரஸ்பரம் நன்மை பயக்கும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்க முடிவு செய்துள்ளன. இது பரஸ்பர வர்த்தகம் மற்றும் முதலீட்டின் திறனை அதிகரிக்கும்.

பால், உணவு பதப்படுத்துதல் மற்றும் மருந்து போன்ற துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் முதலீடு ஊக்குவிக்கப்படும். இந்தியாவும் நியூசிலாந்தும் சுதந்திரமான, திறந்த மற்றும் பாதுகாப்பான இந்தோ – பசிபிக் பகுதியை ஆதரிக்கின்றன. விரிவாக்க கொள்கையை அல்ல, வளர்ச்சிக்கான கொள்கையை நாங்கள் ஆதரிக்கிறோம்.” என்றார்.

தொடர்ந்து பேசிய நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன்,

“வளமான இந்தோ – பசிபிக் பகுதிக்கு பங்களிப்பதில் நமது நலன்கள் குறித்த பகிரப்பட்ட கவலைகளை நிவர்த்தி செய்வதற்கான எங்கள் வலுவான உறுதிப்பாட்டை நான் மீண்டும் வலியுறுத்தினேன்.” என்றார்.

இதனிடையே, இரு தலைவர்களின் சந்திப்பால் ஏற்பட்ட பலன்கள் குறித்த அறிக்கையை பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ளது. அதில், “இந்தியா மற்றும் நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டுள்ளன. தொழில்முறை நிபுணர்கள் மற்றும் திறன்வாய்ந்த பணியாளர்களின் பரிமாற்றத்தை எளிதாக்கும் நடவடிக்கை தொடர்பாக இரு நாடுகளுக்கிடையே பேச்சுவார்த்தையைத் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தோ – பசிபிக் பெருங்கடல் முன்முயற்சியில் நியூசிலாந்து இணைகிறது. பேரிடர் மீட்பு உள்கட்டமைப்புக்கான கூட்டமைப்பில் நியூசிலாந்து உறுப்பினராகிறது.

இந்திய பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் நியூசிலாந்து பாதுகாப்பு அமைச்சகம் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இந்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்துக்கும் நியூசிலாந்து சுங்க சேவைக்கும் இடையே பரஸ்பர அங்கீகார ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் மற்றும் நியூசிலாந்தின் முதன்மைத் தொழில்கள் அமைச்சகம் இடையே தோட்டக்கலை ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இந்தியச் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் மற்றும் நியூசிலாந்தின் முதன்மை தொழில்துறை அமைச்சகம் இடையே வனத்துறை தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இந்திய கல்வி அமைச்சகம் மற்றும் நியூசிலாந்து கல்வி அமைச்சகம் இடையே கல்வி ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இந்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மற்றும் நியூசிலாந்து அரசின் விளையாட்டு அமைச்சகம் இடையே விளையாட்டுத் துறையில் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கச்சதீவு திருவிழாவுக்குப் பின்னர் கடலுக்குச் சென்றனர் மீனவர்கள்

கச்சதீவு திருவிழாவை முன்னிட்டு தொடர்ந்து 5 நாள்கள் கடலுக்குச் செல்லாமல் இருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று திங்கள் கிழமை கடலுக்குச் சென்றனர்.

கச்சதீவில் உள்ள புனித அந்தோணியார் ஆலயத் திருவிழா மார்ச் 14 வெள்ளி மற்றும் மார்ச் 15 சனிக்கிழமை ஆகிய இரண்டு நாள்கள் நடைபெற்றன.

பாதுகாப்பு காரணங்களுக்காக இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விசைப் படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் மார்ச் 12 முதல் கடலுக்குச் செல்வதற்கு மீன்வளத் துறையினர் தடை விதித்திருந்தனர்.

இதனால் கடலுக்கு செல்வதற்கான அனுமதி டோக்கனும் மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இந்நிலையில், இராமேஸ்வரம் விசைப் படகு மீனவர்கள் 500 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் அனுமதி டோக்கன் பெற்று நேற்று கடலுக்குச் சென்றனர். பாம்பன் மற்றும் மண்டபம் விசைப்படகு மீனவர்கள் இன்று கடலுக்குச் செல்கின்றனர்.

# உக்ரைனின் அமைதிக்கான வழிகள் குறித்து விவாதிக்கவுள்ளனர் ட்ரம்ப் - புட்டின்



உக்ரைன் தொடர்பான சமாதான பேச்சுவார்த்தைகள் இன்று இடம்பெறும் பொழுது, 'நிலம்' மற்றும் 'மின் உற்பத்தி நிலையங்கள்' தொடர்பாக தானும் விளாடிமீர் புட்டினும் விவாதிக்கவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சில சொத்துக்களைப் பிரித்துக் கொள்வது தொடர்பாக ஏற்கனவே உரையாடி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் யுத்த நிறுத்தத்திற்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வரும் அதேவேளை, ரஷ்யா உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை, பதிலாக பல்வேறு நிபந்தனைகளை வலியுறுத்தி வருகின்றது.

இதற்கிடையில் உக்ரைன் மற்றும் ரஷ்ய ஆளில்லா வானூர்தி தாக்குதல்களைப் பரஸ்பரம் மேற்கொண்டு வருகின்றன.

ரஷ்யாவின் நிலப்பரப்பிற்கு அருகாமையினால் உக்ரைனின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த சுமி பிரதேசத்தை ரஷ்ய துருப்பினர் மீளக் கைப்பற்றியுள்ளதாகப் பிரதேசத்தைச் சேர்ந்த செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பிரசஸ்சில்ஸ்சில் கூடியுள்ளனர்.

உக்ரேன் வெளியுறவு அமைச்சர் ஆண்ட்ரி சிபிஹாவுடன் (Andriy Sybiha) காணொளி மூலம் இணைந்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதுடன், உக்ரைனின் தற்போதைய போர் மற்றும் அமைதியை ஏற்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் அவர்கள் விவாதிக்கவுள்ளனர்.

இது தவிர, ஐரோப்பிய ஒன்றிய மற்றும் அமெரிக்க உறவுகள் மற்றும் மத்திய கிழக்கின் தற்போதைய நிலைமை குறித்தும் அவர்கள் விரிவாக விவாதிக்கவுள்ளனர்.



# சுனிதா வில்லியம்ஸ் எப்போது திரும்புவார்? கால அட்டவணையை வெளியிட்டது நாசா

விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகியோரை பூமிக்கு அழைத்து வரும் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலத்தின் மூலம் புதிய குழுவினர் சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்றுள்ளனர்.

ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலம் அமெரிக்க நேரப்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு சர்வதேச விண்வெளி மையத்துடன் வெற்றிகரமாக இணைந்ததாக நாசா அறிவித்தது.

சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் விலமோர் எப்போது திரும்புவார்கள் என்பது குறித்த அட்டவணையை நாசா தற்போது வெளியிட்டுள்ளது.

இலங்கை நேரப்படி விபரங்கள்..

மார்ச் 18

காலை 8:15 – சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் மற்றும் மற்ற குழுவினர் டிராகன் விண்கலத்திற்குள் செல்வார்கள்.

காலை 10:35 – டிராகன் விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்தை விட்டு பிரியும் (Undocking)

மதியம் 2:15 – பூமிக்குத் திரும்புவதற்கான பயணம் நாசாவில் நேரடி ஒலிபரப்பு செய்யப்படும்.

மதியம் 2:41 – விண்கலம் அதன் சுற்றுப்பாதையிலிருந்து பூமியின் வளிமண்டலத்திற்குள் நுழையும்

மாலை 3:27 - விண்கலத்தின் வேகம் குறைந்து, பாரசூட்டுகள் விரிக்கப்பட்டு பாதுகாப்பாக கடலில் இறங்கும்

மார்ச் 19

காலை 05:00 மணி - பூமிக்கு அவர்கள் திரும்பிய பிறகு நாசா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் அதிகாரிகள் செய்தியாளர்களை சந்திப்பர்

# அமெரிக்காவை அச்சுறுத்த நினைத்தால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும்

## ட்ரம்ப் எச்சரிக்கை




அமெரிக்காவை அச்சுறுத்த நினைத்தால், அதற்கான கடும் விளைவை ஈரான் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஏமனிலிருந்து செயற்படும் ஹவூதி கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு அளிப்பதை ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை காஸா மீதான இஸ்ரேலின் முற்றுகைக்கு பதிலளிக்கும் விதமாக இஸ்ரேலிய கப்பல்கள் மீது மீண்டும் தாக்குதல்களை நடத்துவோம் என்று ஹவூதி கிளர்ச்சியாளர்கள் அண்மையில் அறிவித்ததை அடுத்து ஹவூதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்க இராணுவம் வான்வழித் தாக்குதலை நடத்தியது.

இதனை தொடர்ந்து அமெரிக்கத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க தயாராக இருப்பதாக ஹவூதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# சிகிச்சை பெற்று வரும் போப் பிரான்சிஸின் புகைப்படத்தை வெளியிட்டது வத்திக்கான்

கத்தோலிக்க திருச்சபை தலைவரான போப் பிரான்சிஸ் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி நுரையீரலில் நிமோனியா பாதிப்பு ஏற்பட்டதன் காரணமாக ஜெமெல்லி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த போப் பிரான்சிஸ் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதாக ஜெமெல்லி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

போப் பிரான்சிஸ் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், அவரது முதல் புகைப்படத்தை வத்திக்கான் வெளியிட்டுள்ளது.

ஜெமெல்லி வைத்தியசாலையின் 10 ஆவது மாடியில் உள்ள போப்பாண்டவர் குடியிருப்பில் மற்றைய பாதிரியார்களுடன் திருப்பலி கொண்டாட்டத்தில் அவர் பங்கேற்றார் எனவும் வத்திக்கான் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 18.03.2025




இன்று ஆன்மீக நிகழ்வுகள் மற்றும் சொற்பொழிவுகளில் பங்கு கொண்டு ஆறுதல் பெறுவீர்கள். பிரார்த்தனையில் ஈடுபடுவது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

பணியிடச் சூழல் பதட்டத்தை அளிக்கும். பணியிடத்தில் நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அதன்படி உங்கள் பணிகளை திட்டமிடுங்கள்.

சாதகமான சூழ்நிலையை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். இதனால் துணையை நட்புடன் அணுக முடியும். மகிழ்ச்சியாக இருக்க உங்கள் துணையின் விருப்பபடி செயலாற்றுங்கள்.

பண இழப்பு ஏற்படாமல் இருக்க கவனம் தேவை. பணத்தை சாதுரியமாக செலவு செய்யவும்.

பதற்றம் காரணமாக முதுகு வலி மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் பதற்றப்படாமல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். உங்கள் அணுகு முறையில் விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். இன்று உங்கள் செயல்களை ஒருமுகப்படுத்தி கவனமாக செய்வதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பதற்றம் காரணமாக பணி வளர்ச்சியில் தாமதம் காணப்படும். பொறுமையுடன் பணிகளை கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் அதிக நெருக்கம் காணப்படும். சமநிலையோடு இருப்பீர்கள். இதனால் நல்ல மன நிலையில் இருப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் கவலையை அளிக்கும்.

தொண்டை ஒவ்வாமையால் பாதிக்கப்படுவீர்கள்.




இன்று உங்கள் முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். நீங்கள் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். உங்களின் இந்த மனப்பான்மை உங்களை உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் பணியில் வெற்றி எளிதாக கிடைக்கும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

பாதுகாப்பற்ற உணர்வு காரணமாக உங்கள் ததுணையிடம் பதற்றத்தை வெளிப்படுத்துவீர்கள். எனவே மனதை அமைதியாக வைத்து மகிழ்ச்சியோடு இருங்கள்.

பணபுழக்கம் போதுமானதாக இருக்கும். எதிர்காலத்திற்காக அதிக அளவில் சேமிக்க இயலும்.

மன நிறைவாக உணர்வதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று ஓய்வாக அமைதியாக இருக்க வேண்டிய நாள். உங்களை அதிகமாக வருத்திக் கொள்ள வேண்டாம். முக்கிய முடிவுகளை தள்ளிப்போடவும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். பணிகளை திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி செயலாற்ற வேண்டும்.

இன்று உங்களிடம் பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடுகள் ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். திட்டமிட்டு அதன்படி செலவு செய்ய வேண்டும்.

மன வருத்தங்கள் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. தியானம் மேற்கொள்வது மிகச் சிறந்தது.




இன்று மிதமான பலன்களே காணப்படும். நண்பர்கள் கூட எதிரிகள் ஆகும் சூழ்நிலை உருவாகும். உணர்ச்சி வசப்படாமல் அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருங்கள்.

அதிக வேலைகள் மற்றும் பொறுப்புகளை சுமையாக உணர்வீர்கள். பணிகளை உறுதியுடன் மேற்கொள்வது நல்லது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது அமைதியையும் நல்லிணக்கத்தையும் பாதிக்கும்.

வரவு – செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிப்பது நல்லது.

கால் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். பிரார்த்தனை மற்றும் தியானம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




பதற்றம் காரணமாக இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். பாடல் கேட்பது திரைப் படம் பார்த்தல் போன்ற வற்றின் மூலம் மகிழ்ச்சி காணலாம்.

பணிகளை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். அதற்கேற்ற படி திட்டமிட்டால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் உணர்வுகளை நகைச்சுவை உணர்வோடு வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் உங்கள் பிரியமானவரிடம் ஆழ்ந்த அன்பு ஏற்படும்.

பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக நீங்கள் நரம்பு பிரச்சினையால் பாதிக்கப்படுவீர்கள்.




இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் இலக்குகளை அடைவீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்ள வேண்டும். இதன் மூலம் உறவின் மதிப்பை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி பிரகாசமாக இருக்கும். சேமிப்பை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த தேக ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று ஆக்கபூர்வமான நாளாக இருக்கும். நீங்கள் புத்துணர்ச்சியுடன் உறுதியாக இருப்பீர்கள். புதிய முயற்சிகள் லாபகரமாக இருக்கும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

நீங்கள் உணர்சிவசப்படுவீர்கள். உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இந்தப் போக்கை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பணப்புழக்கம் காணப்படும். நீங்கள் அதிகமாக சேமிப்பீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.03.2025




இன்று அதிக பொறுப்புகளை நீங்கள் சந்திப்பதன் காரணமாக பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கியமான முடிவுகள் எடுக்க வேண்டாம். பாது காப்பற்ற உணர்வு காணப்படும்.

அதிக பணிச்சுமை காணப்படு வதன் காரணமாக இன்றைய பணிகளை அமைதியாக மேற்கொள்ளுங்கள். பணிகளை ஆற்ற சிறப்பாக திட்டமிடுங்கள்.

இன்று மாறுபடும் மனநிலை காரணமாக எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க வேண்டும்.

நிதிநிலைமை சுமாராக இருக்கும். இன்று அதிக செலவுகள் காணப்படும். நிலைமையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று சுறுசுறுப்பாக காணப்படு வீர்கள். உங்களின் திட்டமிட்ட எளிய அணுகுமுறை மூலம் நன்கு வளர்ச்சி பெறுவீர்கள். உங்களிடம் அதிக உறுதி யும் தைரியமும் காணப்படும்.

பணிகளை எளிதாக முடிப்பீர்கள். பணியில் உங்கள் அணுகுமுறை கூடுதல் ஊதியத்தை பெற்றுத் தரும்.

உங்கள் நகைச்சுவை உணர்வின் காரணமாக துணை யுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும். இன்று அதிக பணம் கிடைக்கும்.

உங்களின் நேர்மறை ஆற்றல் காரணமாக இன்று திடமாக காணப்படுவீர்கள்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறை வேறுவதற்கு உகந்த நாள் அல்ல. இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். மனதில் நம்பிக்கையோடு செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

கடினமாக உழைத்தாலும் உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்காது. இது உங்களுக்கு கவ லையை உண்டாக்கும். பணியில் சவால்களை சந்திப் பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலைமை மந்தமாக இருக்கும். பண வரவுக்கான அதிர்ஷ்டம் காணப்படாது.

சளி மற்றும் இருமல் உபாதைகள் ஏற்படலாம். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.





இன்று உங்கள் இலக்கை நோக்கி முன்னேறிச் செல்வீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் பயனுள்ளதாக இருக்கும். நீங்கள் உங்கள் செயல் களில் வேகமாக இருப்பீர்கள்.

உங்கள் பணியில் வளர்ச்சி காணப் படும். நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் தனித்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களின் நகைச்சுவை அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் நிதிநிலைமை முன்னேற்றகரமாகவும் திருப்திகரமாகவும் இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.



# பொலிஸ் அதிகாரியின் மகனுக்கு 28ஆம் திகதி வரை விளக்கமறியல்

குற்றச்செயல்களில் ஈடுபட்ட நபர் களை சட்டத்தின் பிடியில் இருந்து காப் பாற்றி விடுவிப்பார் எனத் தெரிவித்துப் பணம் பெற்று வந்தார் எனக் கூறப்படும் பொலிஸ் உயர் அதிகாரியின் மகனை எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு, யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத் தின் பதில் பொறுப்பதிகாரியாக கடமை யாற்றிவரின் மகன், பொலிஸ்நிலை யங்களுடன் வழக்குகளை முடித்துத் தருவார் எனக் கூறிப் பணம் பெற்று வந்தமை தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற் றன.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணை களை பொலிஸார் முன்னெடுத்து வந்த நிலையில், பொலிஸ் அதிகாரியின் மகன் தலைமறைவாகி இருந்தார்.

அது குறித்து, யாழ் நீதிவான் நீதி மன்றில் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தனர். சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துமாறு மன்று பொலிஸாருக்கு கட்டளையிட்டிருந்தது.

இந்நிலையில் பொலிஸ் அதிகாரி யின் மகன் நேற்றைய தினம் திங்கட் கிழமை சட்டத்தரணி ஊடாக மன்றில் முன்னிலையானமையை அடுத்து, அவரை எதிர் வரும் 28ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது.

அதேவேளை சந்தேக நபரின் தந் தையான பொலிஸ் அதிகாரி முல்லைத் தீவு பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றப் பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக் கது.